**புதுவை அரசு**
**சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை**
**புதுச்சேரி**

## பத்திரிக்கை செய்தி

புதுவை அரசு. சுகாதரம் மற்றும் குடும்ப நலத்துறை நியூ இந்திய அசூரன்ஸ் நிறுவனத்திடம் புரிந்துனர்வு ஒப்பந்தம் செய்துகொண்டு புதுவை அரசு பணி ஓய்வூதியதரார் அவரது துணைவர் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு விரிவான பங்களிப்பு மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தை மூன்று வருடங்களுக்கு 01.05.2021 வரை செயல்படுத்த உள்ளது. இத்திட்டத்தை மாண்புமிகு புதுவை முதல்வர் திரு. V. நாராயணசாமி அவர்களின் சீரிய தலைமையிலும் மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் திரு. மல்லாடி கிருஷ்ணாராவ் அவர்கள் முன்னிலையிலும் 04.05.2018 அன்று புதுவை சட்டமன்ற அலுவலக குழு மண்டபத்தில் துவக்கிவைக்கப்பட்டது. இவ்விழாவில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு உயர் அதிகாரிகள், சுகாதாரத்துறை இயக்குனர் மற்றும் அதன் அதிகாரிகள், நியூ இந்திய அசூரன்ஸ் நிறுவனத்தின் பொது மேலாளர், துணை பொது மேலாளர் மற்றும் அதன் அதிகாரிகள் அரசு ஓய்வூதியதாரர்கள். அரசு சங்க தலைவர்கள் கலந்து கொண்டனர்.

இத்திட்டத்தின் சிறப்பம்சம் யாதெனில், ஏற்கனவே உள்ள நோய்கள் உட்பட தொடர் நோய்களுக்கு ரொக்கமில்லா மருத்துவ வசதி வழங்கப்படும். இம்மருத்து காப்பீட்டுத் திட்டத்தின் அதிகபட்ச காப்பீட்டுத் தொகை ரூபாய் 3 லட்சத்து ஐம்பதாயிரம் ஆகும். சில 6 கடுமையான நோய்களான கேன்சர், சிறுநீரக கோளாறு மற்றும் மாற்று அறுவைச்சிகிச்சை, முக்கிய உறுப்பு அல்லது எலும்பு மஜ்ஜை மாற்று அறுவைச்சிகிச்சை, வால் நரம்பு உள்வைப்புகள், விபத்துக்களால் ஏற்படும் பல்வேறு காயங்கள் மற்றும் முக்கிய தண்டுவட அறுவைச்சிகிச்சை அல்லது தண்டுவட அறுவைச் சிகிச்சை நிலைப்படுத்துவதற்கு ரூபாய் 50000 கூடுதலாக வழங்கப்படும்.

திருப்புக/...

இத்திட்டமானது உள்புற நோயாளிகளின் சிகிச்கைளுக்கு மற்றும் நாள் பராமரிப்பு மருத்துவ நடைமுறைகளுக்கு மட்டுமே பொருந்தும். வெளிபுற சிகிச்சையோ அல்லது அவர்தம் செய்த மருத்து செலவை திரும்ப பெறுவதற்கு பொருந்தாது.

இத்திட்டத்தின் முதல் வருடத்தில் GSTயுடன் சேர்த்து ரூபாய் 4248 (Rs.3600 + GST @ 18% Rs.648) அடுத்தடுத்த இரண்டு ஆண்டுகளில், ஆண்டிற்கு 7.5% கூடுதல் பிரிமியத்துடன் அவ்வப்போது உள்ள GSTக்கு உட்பட்டு பயனாளிகள் காப்பீட்டு தொகை செலுத்த வேண்டும். இந்த காப்பீட்டு தொகையை இரண்டு தவணைகளாக கணக்கு மற்றும் கருவூலகத்துறையின் மூலம் ஓய்வூதியதாரர்களின் பென்ஷன் தொகையிலிருந்து பிடித்தம் செய்யப்படும்.

இத்திட்டத்தின் மூன்றாம் பகுதி நிறுவாகியாக MD India Health Insurance TPA Pvt., Ltd., செயல்படும். நியூ இந்திய அசூரன்ஸ் நிருவனத்தின் அங்கீகாரம் பெற்ற சிறப்பு வாய்ந்த மருத்துவமனைகளில் இத்திட்டத்தின்மூலம் மருத்துவ வசதி பெற்றுக்கொள்ளளாம். இத்திட்டத்திற்கான அனைத்து விவரங்களும் சுகாதரம் மற்றும் குடும்ப நலத்துறையின் இணையதளத்தில் கிடைக்கும். இத்திட்டத்தின் வாடிக்கையாளர் சேவை எண்கள் 7373703192 & 7373703195. தற்காலிகமாக வாடிக்கையாளர் உதவி அலுவலகம் நியூ இந்திய அசூரன்ஸ், எண் 179, நேரு வீதி, புதுச்சேரியில் இயக்கும். இத்திட்டத்தில் பதிந்துள்ள ஓய்வூதியதாரர்களுக்கான அடையாள அட்டை மூன்றாம் பகுதி நிருவாகியான MD India Health Insurance TPA Pvt., Ltd. வழங்கும்.

தகுதிவாய்ந்த ஓய்வூதியதாரர்கள் இத்திட்டத்தில் மே 31 2018 தேதிக்குள் சேர்வதற்கு அந்தந்த கருவூலகத்தையோ அல்லது வங்கியையோ தொடர்புகொள்ளலாம்.

மேலும் புதியதாக ஓய்வு பெறும் ஊழியர்கள் அவர்கள் ஓய்வு பெற்று ஒரு மாதத்திற்குள், கணக்கு மற்றும் கருவூலக அலுவலகத்தில் விகிதாச் சார்பு காலத்திற்கு முழு பிரீமியம் தொகையைச் செலுத்தி சேர்ந்து கொள்ளலாம்.

**(Dr.K.V. இராமன்)**
இயக்குனர்,
சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை,
புதுச்சேரி.

**PRESS RELEASE**

Government of Puducherry, Directorate of Health & Family Welfare Services, has entered to an agreement with the New India Assurance Co., Ltd. for implementation of Contributory Medical Benefit Scheme to the Retired Government Employees, their spouse & Family pensioners on 04.05.2018 for a period of three years up to 01.05.2021. This scheme is inaugurated by Hon'ble Chief Minister of Puducherry, Thiru. V. Narayanaswamy in the august presence of Hon'ble Health Minister, Thiru. Malladi Krishna Rao.

This Scheme provides cashless medical coverage for the hospitalisation expenses of the enrolled beneficiaries, which includes all the illness & diseases including pre existing diseases. The beneficiaries are entitled for availing cashless treatment as many as times as necessitated as in-patient till the exhaust of the sum insured. Further it covers in-patient treatment only and does not cover out-patient treatment or reimbursement except for Special Day Care Procedures.

Maximum sum Insured per family on floater basis is Rs.3,50,000/-. The Scheme also provides additional sum insured of Rs.50,000/- for six critical illnesses viz. Cancer, Kidney Failure requiring Transplantation, Major Organ / Bone Marrow Transplantation, Cochlear Implants, Multiple injury due to Accidents & Major Spinal Surgery / Stabilisation of Spine Surgery.

The Pensioners/ Family Pensioners shall uniformly pay the insurance premium of **₹4,248/-** per annum with G.S.T **(₹3,600/- Premium + ₹648/- 18% G.S.T)** for the first year, subject to minimum increase of 7.5% per annum of the premium with applicable G.S.T., for the second and third year. The premium shall be paid in two instalments by the pensioners every year.

The Third Party Administrator (TPA) for this scheme is MDIndia Health Insurance TPA Pvt, Ltd. Treatment can be taken at any approved hospitals by the New India Assurance & TPA and is available in the website of Directorate of Health & Family Welfare Services. The **Customer Care Nos. are 7373703192 & 7373703195**. Help Desk at present function at New India Assurance Co., Ltd, No: 179, J.N. Street, Puducherry. The Identity cards shall be issued to the enrolled beneficiaries by the TPA early.

Eligible retired employees can approach the respective Treasury / Bank for enrollment before 31st May 2018.

Further newly retiring employees shall also be enrolled under this scheme by paying entire premium for pro-rata period by exercising their option within one month from the date of retirement through the Directorate of Accounts & Treasuries, Puducherry.